# தாய் கேட்ட அற்புதம்

சிந்தனை விருந்து - 4

புத்தர் பெருமான் பெருந் தவஞ் செய்து பெற்ற ஞானத்தை உலகிற்குப் போதித்துக்கொண்டிருந்த காலம். அவரும் நம் குலகுரு யோககுவாமிகள் போல்; மக்களை அற்புதங்களை எதிர்பாற்காமல்; ஆத்மீக நெறியில் ஒரு படி முன்னேற்றத் தூண்டினர்.
ஒரு சமயம் ஒரு பெண் புத்தர் பெருபானை அணுகி; "நீங்கள் மாபெருஞ் சித்தர். உங்களை நம்பி வந்துள்ளேன். இன்று காலை இறந்துபோன என் குழந்தையை உயிரப்பித்துத் தரவேண்டும்" என வேண்டினாள்.
"அப்படியாயின் தாயே! நீ போய் மரணமே ஏற்பட்டிராத ஒரு குடும்பத்தில் இருந்து ஒரு சிறங்கை அரிசி ஏற்று வாங்கி வா" என அனுப்பினார்.
அப்பெண் ஊரெல்லாம் அலைந்து கடைசியில் அம் முனிவரை அடைந்து; "இவ்வுலகிற் சாவு நிகளாது நிரந்தர சீவியம் செய்யும் குடும்பம் ஏதுமே இல்லை; சாது" என்றாள்.
"தாயே! பிறப்பும் இறப்பும் பிரிக்க முடியாது இணைந்தவை. இப் பூவுலகில் நிலையாமை ஒன்றே நிரந்தரமானது எனும் தத்துவத்தை உணர்ந்து; நீ உன் மனதைத் தேற்றி உளம் தெளிவாயாக" என விளக்கினார்.
அவ்வருள் வாக்கியத்தால் அப் பெண் துக்க நிவர்த்தி பெற்று; புத்தம் கூறும் எட்டுத் தர்ம நெறிகளையும் பத்துச் சீலங்களையும் கடைப்பிடித்து வாழ்ந்து சிவபதம் அடைந்தாள்.

தொகுப்பு : தனா